FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறுவெளிக்களநிலையம் நடாத்தும்**

# Field Work Centre
# தவணைப் பரீட்சை, மார்ச் - 2018
# Term Examination, March - 2018

| juk;:- 13(2018) | ehlfKk; muqfpaYk; I | %dW kzpj;jpahyk; |
|---|---|---|

## பகுதி I

❖ **இப்பகுதியில் 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடையை தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தைஅடைப்புக் குறிக்குள் எழுதுக.**

01. தனது ஆற்றுகைக்கான மூலகங்களை விவிலியப் பாடலில் இருந்தும் பொது வணக்கப் பாடலில் இருந்தும் பெற்றுக் கொண்டதாக குறிப்பிட்ட நவீன அரங்கவியலாளர்.
1) குறொட்ட வெஸ்கி 2) ஆன்ரோனியா ஆர்த்தே 3) அகஸ்தா போல்
4) றிச்சாட் செக்னர் 5) ஸ்ரனிஸ்ல வஸ்கி ( )

02. ‘மனிதனுடைய செயல் அல்லது வினை நிகழ்ச்சி கதைப் பின்னல் என குறிப்பிடப்படும் அரங்கவியலாளர்.
1) அபிநவகுப்தர் 2) அரிஸ்ரோட்டல் 3) பரதமுனிவர்
4) அலடைஸ் நிக்கோஸ் 5) பேணாட்ஷா ( )

03. மறுமலர்ச்சிக் காலத்தில் தோற்றம் பெற்ற அங்க வடிவம்.
1) அரைவட்ட அரங்கு 2) முக்கோண அரங்கு 3) புரொசீனிய வில்வளைவு அரங்கு
4) எண்கோண அரங்கு 5) ஊர்தி அரங்கு ( )

agaram.lk

04. அவலச் சுவை இலக்கணங்களுள் மூன்றாவதாக கொள்ளப்படுவது.
1) பாத்திர உருவாக்கம் 2) கதைப்பின்னல் 3) சொல்லாடல்
4) கருத்து 5) இசை அல்லது பாடல் ( )

05. ஆற்றுகைக் கலைகளை மட்டும் கொண்ட தொகுதியாக கருதக்கூடியது.
1) சிற்பம், நாடகம் 2) ஓமேஹா, இலக்கியம் 3) நாடகம், ஓவியம்
4) பலே, ஓபேஹா 5) நாடகம், சித்திரம். ( )

06. உடல் அசைவுகள், சைகைகள், மெய்நிலைகள் மூலம் வெளிப்படுத்தப்படும் அபிநயம்.
1) ஆஹார்யம் 2) ஆங்கிகம் 3) ஸாத்விகம்
4) லார்ச்சிகம் 5) பிரார்தியாயம். ( )

07. சைக்கிளோராமா எனப்படுவது,
1) படச்சட்ட அரங்கின் முன்திரை
2) படச்சட்ட அரங்கின் பக்கதிரை
3) படச்சட்ட அரங்கின் பின் திரை
4) படச்சட்ட அரங்கின் பார்ப்போர் கூடம்.
5) படச்சட்ட அரங்கின் நுழைவாயில். ( )

08. பின்வருவனவற்றுள் நாட்டிய தர்மி பற்றிய சரியான கூற்று.
1) பாத்திரங்களின் இயல்பான நடத்தையைக் காட்டுவது.
2) ஒரு பாத்திரத்தை ஒரு நடிகரே நடிப்பது.
3) லலித அங்க அசைவுகள் அற்றது.
4) இயல்பான அபிநயங்களைக் கொண்டது.
5) பாத்திர அபிநயம், அசைவுகளைக் குறியீடுகளால் சித்தரித்துக் காட்டுவது. ( )

09. இயற்பண்புவாத நாடக மோடியின் முன்னோடி.
1) அன்ரன் செக்கொல் 2) ஹென்றிக் கிப்சன் 3) பேர்ட்டோல் மிறெச்ட்
4) எமிலிசோயா 5) சாமுவேல் பெக்ட் ( )

10. யதார்த்த நாடக மரபின் முன்னோடி எனக் கருதப்படும் இப்சனின் நாடகங்களுள் ஒன்று.
1) சமூகத்தின் தூண்கள் 2) சம்பந்தம் 3) கடல் வாத்தி
4) செரிப்படித்தோட்டம் 5) வெண்கட்டி வட்டம் ( )

11. புதிதளித்தலுக்கு மிகவும் அவசியமானது?
1) கற்பனை 2) தன்னிறைவு 3) குரல் 4) முகபாவம் 5) ஆர்வம் ( )

12. நடிகர் நீண்ட வசனம் பேசுவதற்கு காற்றைச் சேமித்து வைக்க உதவும் பகுதி.
1) உச்சற் தலையாகும் 2) நாசி ஆகும் 3) நெஞ்சு
4) தொண்டை 5) அடிவயிறு ( )

13. நடிகர் பிரதானமாக கொண்டிருக்க வேண்டியது.
1) பாடும் திறனாகும் 2) ஆடும் திறனாகும் 3) அழகான உடலாகும்.
4) உள்ளார்ந்த நடிப்பாற்றலாகும் 5) சபைக்கூச்சமற்ற மனோ பாங்காகும். ( )

14. நடிகர் ஒருவரின் பேச்சுத்திறனை வளர்க்க உதவும் பயிற்சி.
1) உடல் தளர்வுப் பயிற்சி 2) ஒத்திசைவுப் பயிற்சி 3) குரற் பயிற்சி
4) அவதானப் பயிற்சி 5) புலன்சார் பயிற்சி ( )

15. நடிகரைத் தயார்படுத்துவதற்காக குரற்பயிற்சியை அடிப்படையாகக் கொண்டு இடம்பெறும் அரங்க விளையாட்டு.
1) குருட்டு ஆட்டோ 2) ஆடும் வீடும் 3) படிக் கலவை
4) பொன் முட்டை 5) கோழி கோட்டான் ( )

16. சங்ககால அகம்சார் சடங்காக அமைவது
1) வேலன் வெறியாட்டு 2) துணங்கை 3) களவேள்வி
4) முன்தோர்க் குரவை 5) பின் தோர்க்குரவை ( )

agaram.lk

17. கிரேக்கத்தில் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய கதைகளை வைத்து நாடகம் ஆக்கியவர்.
1) ஈஸ்கலஸ் 2) சோபோகிளிஸ் 3) யூப்பிடிஸ்
4) அரிஸ்ரோபென்ஸ் 5) மெனான்டர் ( )

18. கத்தோலிக்க திருச்சபையின் செல்வாக்கு நாடகத்தில் அதிகமாகக் காணப்பட்ட காலம் யாது?
1) கிரேக்க காலம் 2) மத்திய காலம் 3) மறுமலர்ச்சிக் காலம்
4) எலிசபெத் காலம் 5) உரோம காலம் ( )

19. அவலச்சுவை, மகிழ்நெறி ஆகிய இரண்டு நாடக வடிவங்களிலும் உச்ச புகழைப் பெற்றிருந்த நாடக ஆசிரியர்.
1) சேக்ஸ்பியர் 2) பென்ஜோன்சன் 3) கிறிஸ்தோப்பர் மாலே
4) ஜோன்லிலி 5) தோமஸ்கிட் ( )

20. கிரேக்க அவலச்சுவை நாடகத்தில் சித்தரிக்கப்படாத அம்சம் யாது?
1) அவல நாயகனின் பெருவீழ்ச்சி
2) அவல நாயகனின் அவலத்தவறு
3) அவல நாயகனின் விதி சாபத்தால் பாதிக்கப்படுவான்.
4) அவல நாயகன் தன்னிலும் பார்க்க மேலான சக்தியுடன் முரண்படுவான்.
5) அவல நாயகன் மரணம். ( )

21. முற்று முழுதாக நாடகத்தை இலக்கிய நிலையில் நோக்கியவர் யார்?
1) பரதர் 2) அரிஸ்ரோட்டில் 3) தனஞ்சயர்
4) அபிநலகுப்தர் 5) இளம் பூரணர் ( )

22. கதாசிஸ் பார்வையாளிடம் ஏற்படுத்தும் பிரதான உணர்வுகள்.
1) விரக்தி, பயம் 2) பயம், இரக்கம் 3) இரக்கம், விரக்தி
4) கருணா, கோபம் 5) கோபம், பயம் ( )

23. மட்டக்களப்பில் சித்திரை மாதத்தில் வேளாண்மையுடன் தொடர்புடையதாக ஆடப்படும் ஆற்றுகை வடிவம்.
1) பறைமேளக்கூத்து 2) வசந்தன் கூத்து 3) புலிக்கூத்து
4) மகிடிக் கூத்து 5) குடமுழுக்குக் கூத்து ( )

24. கூத்து புத்தாக்க முயற்சிகளில் பேராசிரியர் வித்தியானநடதனுடன் துணை நின்ற அண்ணாவியர்.
1) நாகமணிப் போடியார் 2) மாணிக்கம் அண்ணாவியார்.
3) க. செல்லையா அண்ணாவியார் 4) தன்னுரைஎனப்படும்
5) சீர்காழி அண்ணாவியார். ( )

25. பாண்டவர்களும் கிளவுஸ் முனிவரும் எனும் கூத்துரவ நாடகத்தை எழுதியவர்.
1) இ. சிவானந்தன் 2) இ. முருகையன் 3) அ. தாசீசியஸ்
4) நா. சுந்தரலிங்கம் 5) மகாகவி உருத்திரமூர்த்தி ( )

26. பேராசிரியர் கணபதிப் பிள்ளையின் தழுவல் நாடகமானது.
1) உடையார் மிடுக்க 2) மாணிக்கமாலை 3) சங்கிலி
4) பொருளோ பொருள் 5) துரோகிகள் ( )

27. நாடகமும் நானும் எனும் நூலை எழுதியவர்.
1) பேராசிரியர் கணபதிப் பிள்ளை 2) பேராசிரியர் சி.மௌனகுரு
3) கலையரசு சொர்ணலிங்கம் 4) சங்கரதாஸ் சுவாமிகள்
5) பம்பல் சம்பந்த முதலியார் ( )

agaram.lk

28. இலங்கையில் தயாரிக்கப்பட்ட பழைமையான நாடகம்.
1) ஞான சவுத்தரி 2) ஹரிஸ் சந்திர 3) என்றிக் கப்பர்
4) ஊ சோன்பாலந்த 5) மூவிராசாக்கள் நாடகம் ( )

29. சிங்கள் மக்கள் மத்தியில் காணப்படுகின்ற "பார்ஷி வழிவந்த" இசை நாடகம்.
1) சொக்கழி 2) தூர்த்தி 3) கோலம் 4) நாடகம் 5) ஸ்பெஷல் நாடகம் ( )

30. 'தானயம் பல" எனும் அரங்கவெளியில் நிகழ்த்திபெறும் ஆற்றுகை வடிவம்.
1) சொக்கரி 2) கோலம் 3) நாடகம் 4) நூர்த்தி 5) ரட்டயக்கும ( )

31. மனோன்மணியம் எனும் நாடக நூலை எழுதியவர்.
1) சுவாமி விபுலானந்தர் 2) பேராசிரியர் சுந்தரம்பிள்ளை
3) பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார். 4) சூரிய நாராயண சாஸ்திரி
5) நாரண நுரைக் கண்ணன். ( )

32. பம்பல் சம்பந்த முதலியார் நிறுவிய நாடக சபை.
1) சுகிர்த விலாச சபை 2) போய்ஸ் கம்பனி 3) சத்தியவான் சாவித்திரி
4) நல்லதங்காள் 5) பக்த அனுமான் ( )

33. ‘பின்வரும் நாடகங்களுள் சங்கரதாஸ் சுவாமிகளால் தயாரிக்கப் பெறாத நாடகம்.

1) வள்ளி திருமணம் 2) பவளக்கொடி 3) சத்தியவான் சாவித்திரி

4) ‘நல்லதங்காள் 5) பக்த அனுமான் ( )

34. ‘உடையார் மிடுக்கு’ எனும் பெயர் பெற்ற நாடகத்தை எழுதியவர்.

1) க.சிதம்பர நாதன் 2) ம.சண்முகலிங்கம் 3) நா.சுந்தரலிங்கம்

4) செ. சுந்தரம்பிள்ளை 5) க.கணபதிப் பிள்ளை ( )

35. நாடக அரங்கக் கல்லூரியின் நிறுவுனர்.

1) மரியசேவியார் அடிகளார் 2) ம.சண்முகலிங்கம் 3) பா. பாலசிங்கம்

4) மெற்றாஸ் மெயில் 5) பிரான்சிஸ் ஜெனம் ( )

❖ **36 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு கீழே தரப்பட்டுள்ள படங்களை அடிப்படையாக கொண்டு விடையளிக்குக.**


A


B


C


D


E

36. படத்தில் காட்டப்பட்டுள்ள வேடமுகம் எந்த அரங்கிற்குரியது.

1) கிரேக்க 2) கோலம் 3) யப்பானிய நோ 4) இந்திய 5) பாவை ( )

37. உயற் பொறிமுறை கோட்பாடை அரங்கில் முன்வைத்தவர்.

1) A 2) B 3) D 4) D 5) E ( )

38. றோயல் தியேட்டருக்காக (சுழலயட வாநயவசந) நடுவேனிற் கனவு நாடகத்தை தயாரித்தவரை குறிக்கும் எழுத்து.

1) A 2) B 3) D 4) D 5) E ( )

39. படம் ஊ யில் இடம் பெற்ற ஒளிக்கலனின் தொழிற்பாடு.

1) ஒன்றை குறித்துக்காட்டு 2) புகையை வெளியிடும்

3) அரங்கு இழுக்க ஒளிதரும் 4) புறஜெக்ரர் ஆகும்.

5) றிமோட் கார். ( )

40. படம் நு இல் காணப்படும் உருவம் எவ்வகை நாடகத்திற்குரியது.

1) கிரேக்க கொமடி 2) கிரேக்க ரயடி 3) உரோம ரயடி

4) கிரேக்க சற்றயர் 5) உரோம கொமடி ( )

(1 X 40 = 40 புள்ளிகள்)

## பகுதி II

❖ **இப் பகுதியில் பிரிவு A இல் இருந்து இரண்டு வினாக்களுக்கும், பிரிவு B இல் இருந்து இரண்டு வினாக்களுக்குமாக நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.**

### பகுதி A (எவையேனும் இரண்டு வினாவிற்கு)

*01.*

i) நாடகத்தின் தோற்றம் பற்றி முன்வைக்கப்பட்ட கருத்தில் அரிஸ்ரோட்டில், பேர்னாட்ஷ, தொம்சன் இம்மூவர் முன்வைக்கப்பட்ட கருத்தைக் குறிப்பிடுக. *(3 புள்ளிகள்)*

ii) நாடகம் ஒன்றின் சிறப்பியல்புகளை பட்டியற்படுத்துக. *(5 புள்ளிகள்)*

iii) நீர் பார்த்து ரசித்த நாடகத்தில் இச் சிறப்பியல்புகளின் பண்பை குறிப்பிட்டு விளக்குக. *(7 புள்ளிகள்)*

*02.* பின்வரும் அரங்க வெளிகளின் அரங்க கட்டமைப்பு, ஆற்றுகை முறை, ஆற்றுவொர் பார்ப்போர் தொடர்பு என்பன பற்றி விளக்குக.

1. அர்சுணன் தபசு அரங்கு *(5 புள்ளிகள்)*
2. மகிடிக் கூத்தரங்கு *(5 புள்ளிகள்)*
3. ஆய்சியர் குரவை அரங்க வெளி *(5 புள்ளிகள்)*

*03.* பின்வரும் நாடக மோடிகளை விளக்குக.

1. இயற்பண்பு நாடகமோடி *(5 புள்ளிகள்)*
2. மனோரதிய நாடகமோடி *(5 புள்ளிகள்)*
3. யதாரத்தவாத நாடகமோடி *(5 புள்ளிகள்)*

### பிரிவு B

agaram.lk

*04.* யூலியர் சீசர் நாடகம் அரசியல் அதிகார வெறி வெளிப்படும் நாடகம் அரசியல் வாதிகளின் இயல்புகளை எடுத்துக் கூறுகிறது.

1. யூலியர் சீசர் நாடகத்தின் பிரதான மோதுகை யாது? *(5 புள்ளிகள்)*
2. இந்நாடகத்தில் இன்றும் பொருந்தி நிற்கும் அரசியல் வாதிகளின் இயல்புகளை எவ்வாறு எடுத்துக் கூறுகிறார் என்பதை விளக்குக. *(10 புள்ளிகள்)*

*05.* 20 ம் நூற்றாண்டில் ஐரோப்பாவின் பின்வரும் அரங்கியலாளர்கள் ஏற்படுத்திய கோட்பாடுகள் அரங்கில் ஏற்படுத்திய மாற்றங்களை விளக்குக.

1. மேயர் ஹோல்ட் *(5 புள்ளிகள்)*
2. குறட் டொவ்ஸ்கி *(5 புள்ளிகள்)*
3. ஒகஸ் தாபோல் *(5 புள்ளிகள்)*

*06.* கீழே தரப்பட்டவற்றுள் மூன்றிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1. மூன்றின் ஒருங்கிமைப்பு
2. கதாசிஸ்
3. பாண்டவர் வனவாசம்
4. உடக்குப்பாண்
5. தஹட்ட சன்னிய

(3X5=15 புள்ளிகள்)

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறுவெளிக்களநிலையம் நடாத்தும்

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2018
## Term Examination, March - 2018

FWC

| juk; :- 13(2018) | ehlfKk; muq;fpaYk; II | %dW kzpj;jpahyk; |
|---|---|---|

### பகுதி I

❖ எல்லா வினாக்களிற்கும் விடை தருக.

❖ சரியான விடையின் இலக்கத்தைப் புள்ளிக்கோட்டில் இடுக.

01. கிரேக்க கால நாடக மரபில் நாடகத்தயாரிப்பிற்கான நிதி உதவி வழங்குபவரை எவ்வாறு அழைத்தனர்?
1) கோரஸ் 2) கொறிக்கஸ் 3) நடிகர் தலைவன்
4) நூற்றுவத் தலைவன் 5) பண்ணையார் ( )

02. வெவ்வேறு நிகழ்விடங்களை கருத்தில் கொண்டு நாடகத்தினை ஆற்றுகை செய்த ஐரோப்பிய அரங்கு யாது?
1) கிரேக்க அரங்கு 2) உரோம அரங்கு 3) காவிய அரங்கு
4) எலிசபெத்கால அரங்கு 5) யதார்த்தலாத அரங்கு ( )

03. அன்ரிக்கனி நாடகத்தின் பிரதான மோதுகை.
1) அரச நீதிக்கும் - தெய்வ நீதிக்கும் இடையிலான போராட்டம்
2) அதிகாரப் போராட்டம்
3) ஆணாதிக்க சிந்தனை
4) தந்தையை கொன்று தாயைத் திருமணம் முடித்தல்.
5) சந்தேக புத்தி ( )

agaram.lk

04. ஒரு பாவையின் வீடு நாடகத்தில் வரும் ஹெல்மரின் பாத்திரப் பண்பாகக் கருத முடியாதது.
1) பாரம்பரியத்திற்கு அடிமைப்பட்டவன்
2) பரந்த மனப்பாங்கானவன்
3) புரிந்துணர்வு இல்லாதவன்.
4) ஆணாதிக்க சிந்தனையுடையவன்
5) பாரம்பரியமான சமூக, பண்பாடு, பொருளாதார அமைப்பில் மூழ்கிப் போனவன். ( )

05. காட்சியமைப்பை பிரதானமாகக் கொண்ட அரங்க மரபு எது?
1) இசை நாடகம் 2) யதார்த்த நாடகம் 3) காவிய நாடகம்
4) வறிய அரங்கு 5) கண்ணுக்குப் புலனாகாத அரங்கு ( )

06. ‘ஒதெல்லோ’ நாடகத்தில் வரும் டெஸ்திமோனாவின் தந்தை.
1) லோடோவிக் 2) இயோகோ 3) மைக்கல் கசியோ
4) ரொட்ரிகோ 5) பிரபான்ஷியா ( )

07. யூலியஸ் சீசர் நாடக கதையின் சீசர் பாத்திரம் எந்நகரைச் சேர்ந்தவன்.
1) கிரேக்க தீபிஸ் 2) இத்தாலிய ரோம் 3) சுகிப்தின் கெப்ரோ
4) ரஷ்யாவின் மொஸ்கோ 5) இங்கிலாந்தின் தெற்கு வேல்ஸ் ( )

08. அபசுரம் நாடகத்தில் சித்தரிக்கப்படாத அம்சம் யாது?
1) காலம் முதன்மை பெறுதல்.
2) தீர்க்கப்பட முடியாத பிரச்சினைக்குள் சிக்குண்டிருத்தல்
3) வகை மாதிரி பாத்திரம் காணப்படுதல்.
4) பயம், விரக்தி முதன்மை பெறுதல்.
5) குறியீட்டுப் பண்பு காணப்படுதல். ( )

09. அலங்கார ரூபன் நாடகத்தில் சித்தரிக்கப்படாத பாத்திரம் எது?
1) செ.க.தணையாழி 2) அதிரவீரசூரன் 3) விசுவாமித்திரர்
4) செட்டி 5) துருவாசமுனிவர் ( )

10. சோபோகிளிஸின் அன்ரிக்கனி நாடகத்தின் முடிவுப் பகுதியில் இடம்பெறும் காட்சி.
1) கிறயன் மரணத்தை நோக்கிச் செல்லுதல்
2) அன்ரிக் கனி தற்கொலை செய்தல்
3) ஏமன் தற்கொலை செய்தல்
4) இயூரிடீசி, தற்கொலை செய்தல்
5) செய்தியாளன் / தூதன் அரண்மனைக்கு புறத்தே திகழ்ந்த இறப்புக்களை உரைத்தல். ( )

11. கணபதிப்பிள்ளையின் நாடகங்கள் முதலில் மேடையேற்றப்பட்ட இடம் எது?
1) கிழக்குப் பல்கலைக்கழகம் 2) ரவர்கோல்
3) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 4) கொழும்புப் பல்கலைக்கழகம்
5) பேராதனைப் பல்கழைக்கழகம் ( )

12. பேராசிரியர் வித்தியானந்தனுக்கு மிகவும் புகழ் ஈட்டித் தந்த பிரதான நாடக பணியாக அமைவது,
1) கூத்தினை நவீன மயப்படுத்தியமை 2) அண்ணாவிமாரை கௌரவித்தமை.
3) கூத்து நூல்கள் அச்சிட்டமை. 4) அண்ணாவிமாருக்கு மாநாடுகள் நடத்தியமை
5) கூத்து தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டமை ( )

13. பேராசிரியர் எதிர் வீர சரச்சந்திரா தனது நாடகங்களுக்கான கதைகளை பெரும்பாலும் எங்கிருந்து பெற்றார்.
1) வரலாற்று கதை 2) கற்பனைக் கதை 3) ஜதீகக் கதை
4) இலக்கியக் கதை 5) சமூகக் கதை ( )

14. அண்மையில் யாழ்ப்பாணத்தில் தமது நாடகங்களை சிங்கள மொழியில் மேடையேற்றியவர்.
1) பராக்கிரமதெரியெல்லே 2) தர்மசிறிபண்டார நாயக்க 3) முகைதீன்
4) ஹென்றி ஜெயசேனா 5) பிரசன்னவிதானகே ( )

15. இலங்கையில் ஆங்கில அரங்கின் முன்னோடி எனக் கருதப்படுபவர்.
1) ஜீபால் 2) ஈ.பெ.சி. லுடோலைக் 3) ஏனெஸ்ற் மக்கின்ரயர்
4) அழகுசுப்பிரமணியன் 5) எதிர்வீரசரச் சந்திரா ( )

agaram.lk

16. நடிகமணி வைரமுத்துவின் பிரதான ஆற்றல் எது எனக் கருதப்படுவது.
1) பாடும் திறன் 2) வேடப்பொருத்தம்
3) சிறந்த உடல் வெளிப்பாடு 4) வேடஉடை, ஒப்பனை, வெளிப்பாடு
5) பாவபூர்வமான பாடலும் நடிப்பும் ( )

17. 1970 களுக்கும் 1990 களுக்கும் இடைப்பட்ட காலத்தில் புகழ்பெற்ற நாடகத் தொகுதி.
1) மண்சுமந்த மேனியர், கோடை, அபசுரம்
2) கோடை, விழிப்பு, உடையார் மிடுக்கு
3) புதிய தொரு வீடு, கடூழியம், சங்கிலி
4) துரோகிகள், சங்காரம், காலம் சிவக்கிறது.
5) பம்மாத்து, வெறியாட்டு, சுந்தரம் எங்கே ( )

18. நாடகம எனும் நாடக வடிவத்தின் தந்தை எனப்படுபவர்.
1) ஜோன் டி. சில்வா 2) பீற்றர் சில்வா 3) கல்கிசை எந்திரிக் அப்புசாமி
4) பேலிஸ் அப்புசாமி 5) பிலிப்புச் சிஞ்சோ ( )

19. சிங்கள யதார்த்தவாத நாடகங்களை சமூக யதார்த்தத்தை தேடும் கலை ஊடகமாக மாற்றியமைத்தவர்.
1) குணசேன கலபதி 2) ஹென்றி ஜெயசேனானா 3) சரச்சந்திரா
4) சுகதபால டி சில்வா 5) சோமலதா சுபசிங்க ( )

20. மகாகவியின் கோடை, ம. சண்முகலிங்கத்தின் கூடி விளையாட்டு பாப்பா போன்ற நாடகங்களை முதலில் நெறியாள்கை செய்தவர்.
1) நா.சுந்தரலிங்கம் 2) இ.சிவானந்தன் 3) அ.தாசீசியஸ்
4) சி.மௌனகுரு 5) சுஹைர் ஹமீட் ( )

21. நடிகர் ஒன்றியத்தில் இணைந்திருந்த அரங்க நிறுவனங்கள்.
   1) அவைக்காற்றுக் கலைக்கழகம், அம்பலத்தாடிகள் குழு
   2) திருமறைக்கலாமன்றம், மட்டக்களப்பு நாடக சபை
   3) எங்கள் குழு, கூத்தாடிகள் குழு
   4) நாடக அரங்கக் கல்லூரி, எங்கள் குழு
   5) அரங்க செயற்பாட்டுக் குழு, செயற்திறன் அரங்க இயக்கம். ( )

22. பின்வருவனவற்றுள் கூத்து முறையில் அமைந்த நாடகம்.
   1) கோடை 2) உறவுகள் 3) சங்காரம்
   4) விளக்கும் விரல்களும் 5) கண்டனன் சீதையை ( )

23. பின்வருவனவற்றுள் அபத்த நாடகமாக கருதப்படுவது
   1) கடூழியம் 2) சங்காரம் 3) அபசுரம்
   4) ஒரு பாவை வீடு 5) உடையார் மிடுக்கு ( )

24. குழந்தை ம. சண்முகலிங்கத்தின் முதலாவது நாடகமாக அமைவது.
   1) அருமை நண்பன் 2) மண் சுமந்த மேனியர் 3) அன்னை இட்டதீ
   4) கூடி விளையாடு பாப்பா 5) எந்தையும் தாயும் ( )

25. அபசுரம் நாடகத்தில் பிரச்சினையைக் குறியீடாக வெளிப்படுத்தும் மேடைப்பொருள் எது?
   1) கடதாசிகள் 2) மின்விசிறி 3) தொலைபேசி
   4) நீர் நிரப்பப்பட்ட சாடி 5) கறுப்புத் திரை ( )

26. திருக்குற்றால குறவஞ்சியில் குளுவ என்பது எதனைக் குறிக்கின்றது.
   1) நாடகத்தின் முற்பகுதி கதையை குறிப்பது.
   2) சிங்கி வளமுரைப்பதைக் குறிப்பிடுவது.
   3) சிங்கி குறி சொல்வதைக் குறிப்பது
   4) வசந்த வல்லியின் காதலின் ஏக்க நிலை பற்றிக் குறிப்பிடுவது.
   5) குறவன் குறத்தியுடன் தொடர்புடையது. ( )

27. ஒப்பனை என்பதனை தெளிவாகக் குறிப்பது யாது?
   1) முகத்திற்கு செய்யப்படுவது.
   2) நடிப்பதற்கு உதவுவது.
   3) நடிகனின் வேட உடையால் மறையாத பகுதிகளுக்கு பூசுதல்
   4) காட்சிகளுக்கு காட்சி செய்யப்படுவது
   5) மோடிகளுக்கு ஏற்ப செய்யப்படுவது. ( )

28. நாட்டுக் கூத்தில் அண்ணாவியாரின் பணியாக அமையாதது எது?
   1) பாத்திரத்தை அறிமுகப்படுத்தல்
   2) மத்தளத்தை இசைத்தல்
   3) பிற்பாட்டுப் பாடுதல்
   4) சபையோரில் ஒருவராக தொழிற்படுதல்.
   5) ஆற்றுகை நிகழும் போது வட்டக்களரியினுள் நின்று தொழிற்படும். ( )

29. ஒரு கட்சியில் ஒரு நடிகர் உரையாடுகின்ற போது மற்றைய நடிகர்.
   1) குறுக்கே பேசாது இருத்தல் வேண்டும் 2) நினைவூட்டுனரைக் கவனிக்க வேண்டும்.
   3) பார்வையாளரை அவதானிக்க வேண்டும் 4) நெறியாளரை அவதானிக்க வேண்டும்.
   5) வேண்டிய பதிற்குறிகளைக் காட்ட வேண்டும். ( )

30. நாடகத்திற்கான இசையின் இயல்புகளுள் ஒன்று.
   1) பொருத்தமான இடங்களில் பாடல்களை வழங்குதல்.
   2) நாடகத்தினூடே மேலோங்கும் உணர்ச்சிக்கு அழுத்தம் கொடுத்தல்.
   3) பாடல்கள் இல்லாது வாத்தியங்களினூடாக மட்டும் வழங்கப்படுதல்.
   4) பார்ப்போருக்குப் பழமையானதாக இருத்தல்
   5) கதையோட்டத்திற்குப் பின்னணியாக மட்டும் அமைதல். ( )

31. புதிதளித்தல் அரங்கில் நடிகர் தெரிவு இடம் பெறுவது பெரும்பாலும்
   1) திறந்த தெரிவு மூலம் 2) மறைமுகத்தெரிவு மூலம் 3) சல்லடைத் தெரிவு மூலம்
   4) நியமத் தெரிவு மூலம் 5) விசேட தெரிவு நுட்பங்கள் மூலம் ( )

agaram.lk

32. வேட முகம் என்பது.
1) நடிகரின் முகத்தை மறைப்பதாகப் பயன்படும்.
2) சிரிப்பூட்டுவதாகப் பயன்படும்
3) ஆடை அணிகளுக்கு ஏற்றதாகப் பயன்படும்.
4) பாத்திரத்தின் இயல்பைக் காட்டுவதாகப் பயன்படும்.
5) விகாரத் தன்மையுடையதாகப் பயன்படும். ( )

33. நாடகம் மேடையேறும் நெறியாளர் ஒருவர்.
1) ஒளி ஒலிகளைக் கவனிக்க வேண்டும். 2) காட்சி மாற்றங்களைச் செய்ய வேண்டும்.
3) ஒலி வாங்கிகளைக் கவனிக்க வேண்டும் 4) எடுத்துரைப்பாளராக விளங்க வேண்டும்.
5) மேடையின் ஓரமாக நின்று அனைத்தையும் கவனிக்க வேண்டும். ( )

34. பின்வருவோரில் நாடக ஆசிரியர் அல்லாதவர்.
1) இ. முருகையன் 2) க. கணபதிப்பிள்ளை 3) நா. சுந்தரலிங்கம்
4) கலையரசு சொர்ணலிங்கம் 5) இ. சிவானந்தன் ( )

A - ஆனால் லாப நட்டம் அதிகமாய் வியாபாரத்திலை தான் பார்க்கிறது.
B - ஓம் …..ம் அது வரவையும் செலவையும் பொறுத்திருக்க
C - ஆனால் எனக்கு ஏன் இந்தக் கஸ்டம் வந்தது?

35. 'மேலே உள்ள உரையடல் "அபசுரம்" நாடகத்தில் இடம்பெறுவதாகும். இங்கு A, B, C எனக் குறிப்பிடப்படும் பாத்திரங்கள் முறையே,
1) அருளர், தியாகர், சிவாயர் 2) தியாகர், அருளர், பொதுவர்
3) சிவாயர், புறாபெசர், பொதுவர் 4) அருளர், தியாகர், பொதுவர்
5) புறாபெசர், அருளர், தியாகர் ( )

36. ஆற்றுவோருக்கும் - பார்ப்போருக்கும் இடையேயான உறவில் "பங்கு கொள்ளல்" செயற்பாட்டின் இன்றியமையாமையை வலியுறுத்திய அரங்கவியலாளர்.
1) பீற்றர் புறூக் 2) அகஸ்தாபோல் 3) றிச்சாட் கெனர்
4) அன்ரோ அன்ரோயின் 5) குறொட்டொவஸ்கி ( )

37. மேடை முகாமையாளரின் பணிகளில் ஒன்று.
1) ஒலி, ஒளி விதானிப்பு 2) ஒப்பனை செய்தல் 3) இசையமைப்பு
4) காட்சிகளை ஒழுங்குபடுத்தல் 5) வேடஉடை தயாரிப்பு ( )

agaram.lk


A


B


C


D


E

38. அன்ரிகனி எனும் நாடகத்தை கர்வபங்கயம் என தமிழில் மொழி பெயர்த்தவர்.
1) A 2) B 3) C 4) D 5) E ( )

39. அவைக் காற்றுகைக் கலைக்கழகம் எனும் நாடக நிறுவனத்தை உருவாக்கியவர்.
1) A 2) B 3) C 4) D 5) E ( )

40. படம் C இல் காணப்படுபவர்.
1) பேரா வித்தியானந்தன் 2) போரா மௌனகுரு 3) இ. முருகையன்
4) க. பாலேந்திரா 5) சிதம்பர நாதன் ( )

(40 x 1 = 40 புள்ளிகள்)

## பகுதி II

❖ **பிரிவு A இல் இருந்து இரண்டு வினாக்களையும், பிரிவு B இல் இருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து நான்கு வினாக்களிற்கு விடை எழுதுக.**

### பிரிவு A

*01.*

1) அன்ரிக்கனி நாடகத்தின் பிரதான மோதுகை யாது? (2 புள்ளிகள்)
2) அன்ரிக்கனி நாடகத்தில் அவலம் வளர்த்தெடுக்கப்படுகிறது விளக்குக? (5புள்ளிகள்)
3) அன்ரிக்கனி, டெஸ்ரி மோனா இவர்களின் செயலே அன்ரிக்கனி, ஒத்தலோ நாடகம் அவல நாடகமாக அமையக் காரணமாகிறது விளக்குக? (8 புள்ளிகள்)

*02.*

1) அவத்த நாடகம் என்றால் என்ன? அவற்றின் பண்புகள் எவை? (5 புள்ளிகள்)
2) அபசுரம் நாடகத்தில் உள்ள பிரதான 3 செயல்களை குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
3) அபசுரம் நாடகத்தில் காணப்படும் அபத்த நிகழ்ச்சிகள் மூலம் தெரியவரும் அடிப்படையான மனித சமுதாய அம்சங்கள் எவை விளக்குக? (7 புள்ளிகள்)

*03.* இலங்கை தமிழ் அரங்க வளர்ச்சியில் பின்வருவோரின் பங்களிப்பை விளக்குக.

1) கலையரசு சொர்ணலிங்கம்
2) பேராசிரியர் க. கணபதிப் பிள்ளை
3) கலாநிதி சிதம்பரநாதன் (3 x 5 = 15 புள்ளிகள்)

### பிரிவு B

agaram.lk

*04.*

1) ஈழத்தில் கூத்து ஆடப்படும் பிரதேசங்களையும் பயில் நிலையில் உள்ள கூத்துக்களையும் பட்டியற்படுத்துக? (5 புள்ளிகள்)
2) கூத்து ஒன்றின் ஆற்றுகைப் பண்புகளைக் குறிப்பிடுக? (5 புள்ளிகள்)
3) நீர் பார்த்த கூத்தில் கூத்தின் ஆற்றுகைப் பண்புகளை ஒப்பிட்டு உமது அபிப்பிராயத்தை விளக்குக? (5 புள்ளிகள்)

*05.*

1) இந்திய அரங்கில் பேசப்படும் இரண்டு வகை தர்மிகளைக் குறிப்பிட்டு விளக்குக? (5 புள்ளிகள்)
2) குற்றாலக் குறவஞ்சியில் மார்க்கமரபும் அலங்கார றூபன் நாடகத்தில் தேசிய மரபும் வெளிப்படும் இடங்களை இனங்கண்டு விளக்குக? (10 புள்ளிகள்)

*06.* பின்வரும் அரங்குகளை ஒப்பிட்டு அவை 3 இற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1) தமிழ்க் கூத்து – சிங்கள நாடகம்
2) தமிழ்க் கழிப்புச் சடங்கு – சிங்கள தொவில்
3) தமிழ் இசை நாடகம் - சிங்கள் நூர்த்தி நாடகம்

(3 x 5 = 15 புள்ளிகள்)